IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.1/2024

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | VENKATESAN |
| FATHER'S NAME | : | THAMOS |
| VILLAGE | : | KONDAMPALLI |
| OCCUPATION | : | SECURITY |
| AGE | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 11th day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் கொண்டபம்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊரை சேர்ந்தர். 16.08.2023 அன்று மாலை சுமார் 4 ல் இருந்து 5 மணி அளவில் நான் வேலைக்கு சென்றிருந்த போது எனது மனைவி போன் மூலமாக என்னிடம் புருஷோத்தமன் என்பவர் ஊர் திருவிழாவின் போது சிலையை எனது மனைவி அவரிடம் இருந்து பிடுங்கியதால புருஷோத்தமன் என்பவர் எனது மனைவியின் மாராப்பை பிடித்து இழுத்துவிட்டு அடித்ததால் முதுகில் காயம் ஏற்பட்டதாக என்னிடம் கூறினார். பின்னர் எனது மனைவி பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்திருந்தார். நான் பணி முடித்து 7 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். பின்னர். காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வழககில் பாதிக்கபட்டதாக சொல்லப்படும் அ.சா.1 எனது மனைவி ஆவார். எனது குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் பொது இடம் யாருக்கு சொநத்த மானது தொடர்பாக சிவில் வழக்கு போடப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். திருவிழாவில் சண்டை நடந்த சமயத்தில் நான் அங்கு இல்லை என்றால் சரிதான். நான் வேலை விஷயமாக சென்னையில் இருந்தேன் என்றால் சரியல்ல. பேர்ணாம்பட்டில் இருந்ததேன். நான் சண்டையை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மனைவியை பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் சென்று தான் பார்த்தேன் என்றால் சரிதான். எதிரி எனது மனைவியை அடிக்கவில்லை என்றாலும், எனது மனைவியின் மாராப்பை பிடித்து இழுக்கவில்லை என்றாலும் பாதிக்கபட்டவர் அ.சா.1 எனது மனைவி என்பதாலும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது மனைவி கோவிலில் சூலத்தை எடுக்கும்போது வழுக்கி கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. பேர்ணாம்பட்டு தாலுக்கா அலுவலகத்தில் எதிரி தினசரி சம்பளத்திற்கு செக்யூரிட்டி வேலை பார்த்து வருவதாகவும் எதிரியின் வேலை

நிரந்தரமாக கூடாது என்பதற்காக பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எனது மனைவியும் பொய்யான புகார் அளித்ததால் போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் ஆர்பாட்டம், சாலை மறியல் செய்ததால்தான் போலிசார் விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக போலிசார் எந்த தேதயில் எந்த இடத்தில் வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. எனது மனைவி தான் வழக்கமாக வீண் சண்டை செய்து அக்கம் பக்கத்தில் பிரச்சனை செய்வார் என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.